# அறிஞர் அண்ணாவின் எளிமை!

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 116 ஆவது பிறந்த நாள் . 1909 ஆவது ஆண்டு பிறந்த அண்ணா அவர்கள் 1969 வரை தான் வாழ்ந்தார்கள். வாழ்ந்த காலம் குறைவு என்றாலும் கூட வரலாற்றில் அவருடைய அழுத்தமான பதிப்பு என்பதும் முத்திரை என்பதும் எந்தக் காலத்திலும் எவராலும் மறக்க முடியாததாக இருக்கின்றது. இன்னும் நூறாண்டுகள் பல கடந்தாலும் கூட அண்ணா என்ற தலைவனுடைய நினைப்பு யாருக்கும் மறவாது. அவருடைய அரசியல் கருத்துகள் இல்லாமல் தமிழ்நாட்டில் யாரும் இயங்க முடியாது என்று அழுத்தமான வாழ்க்கைப் பாதை அண்ணாவினுடைய பாதை. ஏழை எளியவர்களுடைய மனம் தொட்டார்,



அதேபோல் படித்தவர்கள் என்று உச்சத்தில் இருந்தவர்களுடைய கருத்துகளில் மன மாற்றம் ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு அண்ணாவினுடைய அணுகுமுறை இருந்தது. கொள்கையில் தெளிவு, சிந்தனையிலே தீர்க்கம், நாடு என்கின்ற எண்ணமும், மக்கள் என்கின்ற கவலையும், மொழியை பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும் அவரை போல் அதற்கு முன்பு வேறு யாருக்கும் இருந்ததாக தெரியவில்லை. அதற்கான சுவடுகளும் இல்லை. சிலருக்கு இருந்திருக்கலாம், ஆனால் அண்ணாவைப் போல் நடைமுறைக்கு கொண்டு வந்தவர்கள் யாருமே கிடையாது. மக்களில் பலதரப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். எல்லோருடைய உள்ளங்களையும் தொடுவது என்பது

அவ்வளவு எளிதானது அல்ல. சிலர் ஏழைகளுக்கான தலைவர்களாக இருப்பார்கள், சிலர் உழைக்கின்ற வர்க்கத்தை சார்ந்தவர்களுக்காக தொழிலாளர் நலன் பேணுபவர்களாக இருப்பார்கள், சிலர் படித்தவர்களுக்கு மத்தியிலே அவர்கள் மிகவும் திறமைசாலிகள், புத்திசாலிகள் என்று பெயர் பெற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் எல்லோரையும் கவருகின்ற அளவிற்கு வாழ்ந்த தலைவர் அண்ணா ஒருவர்தான். அவருடைய வாழ்க்கையினுடைய மிகப்பெரிய சிறப்பு என்பது அவருடைய எளிமை. ஏழைகளுக்காகவே அவருடைய வாழ்வு இருந்தது என்பதை அவருடைய பொன்மொழிகளில் தலையாயது, எந்நாளும் மறக்க முடியாத ஒன்று “ ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்” .

அவருடைய தோற்றம், அவருடைய உடைகள், செயல்பாடுகள், உணவு பழக்க வழக்கங்கள், பழகுகின்ற முறை எல்லாமே ஏழைகள் தங்களுக்குரியவர் இவர் என்று கருதுகின்ற அளவிற்கு தான் இருந்தன. அதைத்தான் அண்ணா அவர்கள் தன்னுடைய தம்பிமார்களுக்கு அறிவுரை சொல்கிறபோது சொல்வார் ,

“ Dear brother, go to the people, live among them, love them, serve them” என்று ஆரம்பிக்கிற போதே நன்றாகவே தெரியும். அவர்களுக்கு என்ன தெரியுமோ அவர்களைச் சென்று நேசியுங்கள் என்று சொன்னார். “ Start with what they know, build on what they have” என்று சொல்லுகிற போது ஏழைகளிடம் சென்று, அவர்களோடு வாழ்ந்து, அவர்களை நேசித்து, அவர்களுக்கு எது தெரியுமோ அதிலிருந்து தொடங்கு! அவர்களிடம் என்ன இருக்கிறதோ அதிலிருந்து நீ கட்டுமானத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று அண்ணா சொன்னது அவருடைய கவனம் முழுவதும் ஏழைகளின் பாலே இருந்தது என்பதற்குத்தான்.

அண்ணா மறைந்ததற்குப் பின்னால் அவருடைய காஞ்சிபுரம் இல்லத்தை நினைவு இல்லமாக திறந்து வைப்பதற்கு குடியரசுத் தலைவராக இருந்த நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் வந்தார்கள். ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சரின் வீட்டை நினைவு இல்லமாகத் திறப்பதற்கு குடியரசுத் தலைவர் வந்தது இதுதான் முதல் முறை. அப்போது சஞ்சீவி ரெட்டி அவர்கள் மிகுந்த வியப்போடு சொன்னது, “இவ்வளவு எளிமையான வீட்டில் பிறந்த தலைவனா ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சராக உயர்ந்தார் என்பதை விட , எல்லோருடைய மனம் கவருகின்ற அளவிற்கு வாழ்ந்தார்” என்று குறிப்பிட்டு ஆக ஒரு மனிதனுடைய பொருளாதாரப் பின்னணி என்பது அவருடைய தகுதிகளுக்கோ அவருடைய வளர்ச்சிக்கோ காரணமல்ல என்பதும் , ஜனநாயகத்தினுடைய சிறப்பும் புரிகிறது என்றும் குறிப்பிட்டு விட்டுச் சென்றார்கள். எனக்குத் தெரிந்தவரை நான் படித்ததும் கேட்டதும் தான் அதிகம்.

**என்னுடைய வயதிற்கு அண்ணாவை நேரடியாகப் பார்த்து நெருங்கிப் பழகுகின்ற அளவிற்கு வாய்ப்பினை நான் பெறவில்லை. பெரியாரோடு பார்த்துப் பழகுகின்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இவர்கள் இருவருடைய வடிவத்தில் இருந்த கலைஞரோடு இருக்கின்ற வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஆனால் அண்ணாவோடு நெருங்கி இருக்கிற வாய்ப்பு கிடைத்ததில்லை. ஆனால் அவரோடு பழகியவர்கள் சொல்லக்கேட்டு அவரோடு இருந்தவர்கள் எழுதியதை வைத்து தான் இன்றைக்கும் அண்ணாவைப் பற்றி தெரிந்து கொள்கிறோம். அண்ணாவினுடைய எழுத்துக்களை எப்போது படித்தாலும் சிலிர்ப்பு ஏற்படும். முன்பு இருந்ததை விட நம்முடைய பாதையின் பயணத்தில் வேகம் அதிகம் பிறக்கும் .இன்னும் எத்தனை பிரச்சனை களோ? இதை இப்படி அணுகலாமா? இவ்வளவு மென்மையாக ஒரு பிரச்சனையை அணுகி அதில் வெற்றி பெறலாமா என்பதற்கெல்லாம் அண்ணா அவர்கள் தான் எடுத்துக் காட்டு.**

ஒருமுறை அண்ணா அவர்கள் திருச்சிக்கு வந்திருந்த போது, அவருடைய காலணிகள் பழையதாகி அறுந்து போய்விட்டன. புதிய செருப்பு வேண்டும் என்று கேட்டபோது, அப்போது திருச்சியிலே கட்சியினுடைய நிர்வாகியாக இருந்த கொஞ்சம் வசதியாக இருந்த எஸ்.ஏ.ஜி.ராவ் என்பவர் அண்ணாவை அழைத்துக் கொண்டு சிங்காரத்தோப்பு கடைவீதிக்கு செல்கின்றார் . அங்கே சென்று ஒரு பெரிய கடையிலே நிறுத்தி உள்ளே சென்று செருப்புகளை பார்க்கிறார்கள். செருப்பின் விலை ஐந்து ரூபாய், ஆறு ரூபாய் என்று இருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்துவிட்டு, இது வேண்டாம் என்று நிராகரித்து விட்டு திரும்பி கிளம்பி வருகின்ற வழியில் , தெப்பக்குளத்திற்குப் பக்கத்திலே சாலையோரத்தில் ஒரு செருப்பு தைக்கின்ற தொழிலாளி செருப்பு தேய்த்துக் கொண்டிருக்கின்றார். அப்போதெல்லாம் கொஞ்சம் பழக்கமாக இருந்த ஒன்று கார் சக்கரத்திலே இருக்கின்ற அந்த டயரிலிருந்து செருப்பு தைப்பார்கள் . அதுபோல ஒரு முரட்டுத்தனமான செருப்பை அவர் வைத்திருக்கிறார். அதன் விலை எட்டணா. அண்ணா அதைப் பார்த்துவிட்டு அதை காலிலே அணிந்து பார்க்கிறார் சரியாக இருக்கிறது. எனக்கு இதை வாங்கி கொடு என்கிறார். அதற்கு உடன் வந்தவர் சொல்லுகிறார் “அண்ணா, அங்கே நல்ல செருப்பு பார்த்தோம், காலுக்கு இதமாக இருக்கும், இது கடினமாக இருக்குமே” என்று சொல்லுகிற போது அண்ணா சொன்னார், “அது எப்படியாவது விற்று விடும், யாராவது வந்து - வாங்குவார்கள் ஆனால், இந்த ஏழைக்கு இன்று இதை நான் வாங்கி சென்றால் தான் அவன் வீட்டிலே இன்றைக்கு உலை கொதிக்கும் . எனவே என் காலுக்கு அது இதம் தரும் என்பதைவிட அவன் வாழ்வுக்கு சுகம் தரும் என்பது தான் முக்கியம்” என்று அணிந்து கொண்டு சென்றதாக சொல்லுவார்கள். கேட்கிறபோதே நெஞ்சம் நெகிழும்.

அதேபோல் பின்னர் ஒரு முறை அண்ணாவினுடைய தேதிகள், அவருடைய கூட்டங்களுக்கு நிகழ்ச்சிகளுக்கு எப்போது அவர் செல்வது என்பதை வகுத்துக் கொடுக்கின்ற அந்த பெரிய கடமையை அரங்கண்ணல் அவர்கள் தான் செய்து கொண்டிருப்பார் . அரங்கண்ணல் அவர்கள் பின்னாளில் பல பொறுப்புகளில் இருந்தார், சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். குடிசை மாற்று வாரிய தலைவர் என்றெல்லாம் இருந்தார். ஆனால் அண்ணா காலத்திலே அவருக்கு அணுக்கமாக இருந்து அவருக்கு சேவை செய்வதையே தொண்டு என்று கருதியவர்கள் பல பேர். அதில் அவர் ஒருவர். அண்ணாவுக்கு பக்கத்தில் இருந்து அவருடைய ஒவ்வொரு அசைவையும் கவனித்து, அதைப் பற்றி பிறரிடம் புகழ்ந்து பேசி அல்லது இப்படிப்பட்ட ஒரு தலைவனுக்கு பின்னால் செல்கிறோம் என்ற ஒரு பெருமிதம் எல்லோருக்கும் இருந்தது . அதனால்தான் எல்லோருமே பெரிய தலைவர்களாக பரிணமித்தார்கள்.

அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் அரங்கண்ணல் அண்ணாவிடம் சென்று சொல்லுகிறார், “அண்ணா, சில தொழிலதிபர்கள் தேர்தலுக்கு நிதி தர விழைகிறார்கள். Cosmopolitan club அதை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள் என்று அண்ணாவிடம் சொன்னபோது அண்ணா, “தேதி கொடுத்து விட்டாயா? என்று கேட்கிறார். “உங்களைக் கேட்காமல் நான் எப்படித் தருவேன்?” என்று இவர் பதில் சொன்னவுடன் , “வேண்டாம், தேதி தர வேண்டாம் என்று அண்ணா சொல்லுகிறார் . அதற்கு இவர் கொஞ்சம் தயங்கிய படியே, “அண்ணா, நிறைய நிதி தருவார்கள் என்று சொல்கிறார். “நிறைய தருவார்கள்” தம்பி, ஆனால் கொடுக்கிறவர்கள் யார்? கொடுக்குற இடம் எது ?என்று பார்! நாம் அங்கு சென்று அவர்களிடம் கையேந்தி நிதி வாங்கினோம் என்றால் பின்னர் அவர்கள் சொல்வதற்கெல்லாம் கட்டுப்பட வேண்டி இருக்கும். நாம் ஏழைகளுக்காக இயக்கம் நடத்துகிறவர்கள். இப்படிப்பட்ட பெரும் பணக்காரர்களிடம் நெருங்க நேருமேயானால் எதிர்காலத்தில் நம்முடைய கொள்கைகள் தடம் மாறும்” என்று சொன்ன அந்த பெருந்தகையை இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் 1967 தேர்தலில் வெற்றி பெறுகின்றது. அறிஞர் அண்ணா முதலமைச்சரா கிறார். எல்லாரும் உற்சாகத்திலே, உச்சாணிக்கொம்பிலே இருந்த போது அண்ணா கவலையோடு இருந்தாராம் . “நாம் இன்னும் கொஞ்சம் காலதாமதமாக இந்த பொறுப்பிற்கு வந்திருக்கலாம். இன்னும் பயிற்சி பெற வேண்டி இருக்கிறது” என்று தான் அண்ணா சொன்னார். காமராஜர் அந்த தேர்தலில் தோற்று விட்டார் என்ற செய்தி வந்த போது அண்ணா மிகுந்த கவலையுற்றார். எல்லோரும் ஓடி வந்து “அண்ணா, காமராஜரையே தோற்கடித்து விட்டோம்” என்று சொன்னார்கள். அப்போது அண்ணா சொன்னார் “திருத்திக் கொள்ளுங்கள், காமராஜரையே தோற்கடிக்கிற நாடு இது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் . அவர் எதிர்க்கட்சித் தலைவராக உட்கார்ந்திருந்தால் நமக்கு

**திருச்சி சிவா**
மாநிலங்களவை
கழகக் குழுத் தலைவர்



மிகப்பெரிய வழிகாட்டுதல் இருந்திருக்கும் .அவருடைய அனுபவம் நமக்கு சட்டமன்றத்திலே மிகப்பெரிய துணையாக இருந்திருக்கும் . ஆக அவருடைய தோல்வி எல்லாம் நாம் கொண்டாடப்பட வேண்டியது இல்லை . நாம் வேதனைப்பட வேண்டியது” என்று சொல்லிவிட்டு, “கழகத் தோழர்கள் வெற்றி விழா கூட்டம் என்று நடத்துவதை கொஞ்ச நாள் தள்ளி போடுங்கள் தம்பி ,கொண்டாட்டங்கள் வேண்டாம். ஏற்கனவே தோற்றுப் போன வேதனையிலேயே இருக்கிற காங்கிரசாருக்கு மேலும் மன வேதனையை உருவாக்க வேண்டாம்” என்று சொன்ன பெருந்தகையை எண்ணிப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட தலைவர் மண்ணிலே வாழ்ந்திருக்கிறார்.

பெரியாரிடம் கருத்து வேறுபாடு கொண்டு அண்ணா பெரிய அளவில் இளைஞர் பட்டாளத்தோடு தனியாக ஒரு இயக்கம் தொடங்கிய பொழுது , “திராவிட நாடு “ என்று அவர் ஆசிரியராக இருந்த இதழில் எல்லோரும் கண்ணீர் விட்டு அழுவதைப் போல அந்த கண்ணீரிலே பெரியார் மூழ்குவதைப் போல ஒரு அட்டைப்படம் வெளியிட்டிருந்திருக்கிறார்கள். அதைப் பார்த்து கோபப்பட்ட பெரியார், அண்ணாவிற்கு பின்னால் சென்றவர்களை எல்லாம் ‘கண்ணீர் துளிகள்’ என்று விமர்சித்தார். இன்னும் கடுமையாகக் கூட விமர்சித்தார். அப்போது அண்ணா அவர்கள் கொஞ்சம் கூட கோபம் கொள்ளவில்லை. மாறாக அவர் சொன்ன வார்த்தை “நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர் பெரியார் தான். இந்த கட்சியிலே தலைவர் என்ற நாற்காலி அவருக்காகவே காத்திருக்கும் , அந்த நாற்காலியில் உட்கார வேறு யாருக்கும் தகுதி கிடையாது ” என்று சொல்லி தன்னை அவ்வளவு கடுமையாக பெரியார் விமர்சித்த போது கூட அவரைத்தான் தனது தலைவர் என்று சொன்னவர் . அதைவிட முக்கியம், தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் தமிழ்நாடே கொண்டாட்டத்தின் உச்சாணியில் இருக்கிற போது , அண்ணா யாருக்கும் சொல்லாமல் அங்கிருந்து கிளம்பி நேரடியாக வந்து சந்தித்தது தந்தை பெரியார் அவர்களை . யார் தன்னை காலமெல்லாம் விமர்சித்துக் கொண்டு இருந்தார்களோ, திராவிட முன்னேற்றக் கழகம் தோற்க வேண்டும் என்பதற்காக ஊரெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தாரோ, அந்தப் பெரியாரைத் தேடி வந்து “இந்த ஆட்சி உங்களுக்கு காணிக்கை” என்று சொன்னபோது பெரியார் நெகிழ்ந்து போனார்கள். நெகிழ்ந்து போனதோடு மட்டுமில்லை; மிகுந்த தயக்கத்தோடு “இவ்வளவு பெருந்தன்மை உள்ள உங்களை நான் எப்படி எல்லாம் புண்படுத்தி இருக்கிறேன்”என்று பெரியார் சொன்னார் . அந்த அளவிற்கு தன்னை விமர்சித்த வர்களை, தன்னை நிந்தித்தவர்களை, பதிலுக்கு பதில் என்று இல்லாமல் தன்னுடைய மென்மையான அணுகுமுறையால் தான் யார் என்பதை உணர வைக்கின்ற அந்த மிகப்பெரிய பண்பு அண்ணாவுக்கு தான் உண்டு.

அப்பொழுது மாணவர்களுடைய போராட்டம் தான் அந்தக் கட்டத்தில் தமிழ்நாட்டில் உச்சத்தில் இருக்கின்றது. யாராலும் அடக்க முடியாத அளவிற்கு துப்பாக்கிச் சூடெல்லாம் நடத்த வேண்டிய நிலைமை வந்தது . இந்திய வரலாற்றில் அப்படி ஒரு நிகழ்ச்சி அதற்கு முன்பு நடந்ததே இல்லை .

**மாணவர்கள் போராட்டம் நடக்கிறபோது பல பேர் சிறையிலே இருக்கிறார்கள் .முன்னதாகவே கைது செய்யப்பட்டு அண்ணா சிறையில் இருக்கிறார். மாணவர்களின் போராட்டம் வெளியிலே மிக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. பின்னர் அண்ணா அங்கிருந்து பார்க்க வந்தவர்கள் மூலமாக மாணவர் தலைவர்களாக இருந்த, அன்றைக்கு இருந்த பெ. சீனிவாசன் , இன்றைக்கு இருக்கிற எல். கணேசன் ,துரைமுருகன் போன்றோர்களை எல்லாம் வரவழைக்கின்றார். அழைத்து அவர்களை சிறைச்சாலை யிலே பார்த்துச் சொன்ன வார்த்தை, “போதும், போராட்டத்தில் இருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்” என்று சொல்கிறார். அதற்கு அவர்கள் “அண்ணா, போராட்டத்தை இனி அடக்க முடியாது , இது உச்சத்திற்கு சென்று விட்டது. தமிழைக் காக்கத்தானே போராட்டம் நடத்துகிறோம்” என்று கேட்ட போது அண்ணா கோபத்தோடு கேட்டு இருக்கிறார், “தமிழைக் காப்பது எதற்குத் தெரியுமா? உங்களை எல்லாம் வாழ வைப்பதற்கு! உங்களையெல்லாம் சாகக் கொடுத்துவிட்டு நான் தமிழைக் காப்பாற்றி என்ன செய்யப் போகிறேன் ? ஒதுங்கிக் கொள்ளுங்கள். இனி கட்சி பார்த்துக் கொள்ளும். தயவுசெய்து மாணவர்கள் இப்படிப்பட்ட போராட்டங்களில் ஈடுபட்டு உயிர்த் தியாகத்திற்கு ஆளாக வேண்டாம்” என்று சொன்னார் .**

பேரறிஞர் அண்ணா முதல்வரானதற்குப் பின்னால் இரண்டு நிகழ்வுகள் நடந்தன. முதலிலே ஒரு மாணவர் போராட்டம் நடைபெறுகிறது. அப்போது காவல்துறை அதிகாரிகள் அண்ணாவை சந்தித்து சொல்கிறார்கள் , “அண்ணா போராட்டம் எல்லை மீறி சென்று விட்டது , கட்டுக்கடங்காமல் போகிறது. எனவே எங்களுக்கு துப்பாக்கி சூடு நடத்த அனுமதி தாருங்கள் என்று கேட்கிறார். அண்ணா “வேண்டாம், முடிந்தவரை கலவரத்தை ஒடுக்கப் பாருங்கள் என்று சொல்கிறார் . அவர்களோடு பேசிப் பாருங்கள் என்கிறார். ‘இல்லை அண்ணா, அவர்கள் ரயில் நிலையம் நோக்கி செல்கிறார்கள் என்று சொன்னபோது, “உங்கள் துப்பாக்கி தோட்டா ஒரு மாணவனுடைய உயிரை பறிக்குமேயானால்,அவனுடைய பெற்றோருக்கு அந்த பிள்ளையை நான் திருப்பித் தர முடியாது” என்று சொல்லுகிற அந்த தாய் உள்ளம் ஒரு தலைவனுக்கு இருந்தது . தன்னுடைய ஆட்சி, அதிலே இடையூறு ஏற்படுத்த முயற்சிக்கிறார்களே என்று கருதாமல் மாணவர்களை பாதுகாக்க வேண்டும் என்று எதிர்க்கட்சியாக இருந்தபோது தன் தொண்டர்களை “போதும் நீங்கள் ஒதுங்கிக் கொள்ளுங்கள் , உங்களை எல்லாம் வாழ வைப்பதற்கு தான் போராட்டமே தவிர , உங்களை சாகக்கொடுத்து அதில் கிடைக்கிற வெற்றி எனக்குத் தேவை இல்லை” என்று சொன்ன அந்த பண்பு எல்லா அரசியல் தலைவர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.

அதேபோலத்தான் பின்னாளில் ஆளுங்கட்சியாக இருக்கிற போது மாணவர்கள் போராட்டத்தின் போது

மாணவர்களை எதுவும் செய்யாதீர்கள் என்று சொன்ன அண்ணா. அதற்கும் பின்னால்தான் 68 ஆம் ஆண்டு ஒரு மருத்துவக் கல்லூரி மாணவருக்கும் ஒரு பேருந்து நடத்துநருக்கும் ஏற்பட்ட மோதல் பெரிதாகி மிகப் பெரிய கலவரமாக உருவாகிறது. முதலமைச்சராக இருக்கிற அண்ணாவே தலையிட்டு மாணவர்களின் சார்பாக நடத்துநரிடம் மன்னிப்பு கோருகிறார். ஆனால் அண்ணா மன்னிப்பு கோரியதற்கு பின்னாலும் அவர்கள் இசைய மறுக்கிறார்கள். போராட்டத்தை இன்னும் அதிகமாக எடுத்துச் செல்கிற போது அதிலே தீவிரமாக பேசிய அண்ணா மயக்கமுறுகிறார். மயக்கமுற்ற அண்ணாவுக்கு அப்போது வாயிலே இருந்து ரத்தம் வருகிறது.

மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார்கள். அப்பொழுதுதான் தெரிகிறது அண்ணாவுக்கு புற்றுநோய் என்று. ஆக இதையெல்லாம் பார்க்கிற போது ஒரு பெரிய தலைவர், பெரிய பொறுப்பிலே இருக்கிறவர்,‘எது நடந்தால் எனக்கென்ன? என்னிடம் இருக்கிற அதிகாரத்தை கொண்டு ஒடுக்குவேன் என்று கருதாமல், மாறாக அவர்களை அழைத்து சமாதானம் செய்வது, அவர்களுக்காக தானே மன்னிப்புக்கு கோருவது , ஒரு பிரிவினருடைய தேவையை நிறைவேற்ற என்ன செய்ய வேண்டும் என்று இறங்கி வருவது – இதெல்லாம் தான் ஒரு அரசியல் தலைவரிடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அப்பொழுதெல்லாம் சென்னையிலே அடிக்கடி வரக்கூடிய செய்தி என்னவாக இருக்கும் என்றால் குடிசைகள் பற்றி எரிந்து விட்டன என்று . அப்பொழுதெல்லாம் நிறைய குடிசை வீடுகள் தான், கூரை வீடுகள் தான் எல்லா இடங்களிலும் இருக்கும். இன்றைக்கு காலம் மாறி இருக்கிறது. உயர்ந்த கட்டடங்கள், அடுக்குமாடி கட்டடங்கள் அதைத்தான் அண்ணா சொல்லுவார், உயர்ந்த கோபுரங்கள் தாழ்ந்த உள்ளங்கள் என்று சொல்லுவார். கோபுரங்கள் உயரமாக இருக்கலாம் ஆனால் அதில் இருப்பவர்களுடைய உள்ளம் தாழ்வாக இருக்கிறது என்று .

“நிலையும் நினைப்பும்” என்கிற தலைப்பில் அண்ணா பேசுகிறபோது அதைத்தான் சொல்வார். ஒரு இடத்திலே ஒருவருடைய நிலை உயர்ந்து இருக்கிற காரணத்தினால் அவருடைய நினைப்பும் உயர்ந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை . மாங்கனி திருடுவதற்கு மரத்தில் ஏறி இருப்பவன் இருப்பது உயர்ந்த இடம் , ஆனால் பயம் என்னவோ கீழே இருக்கிற தோட்டக்காரனுக்கு மத்தியிலே இருக்கும். அதனால் நிலை என்பது இருக்கிற இடத்தை பொறுத்தது அல்ல, நினைப்பை பொறுத்தது என்று சொல்வார்கள் . அதைப்போல் அன்றைக்கு எங்கே பார்த்தாலும் குடிசை கள், கோடைகாலத்தில் எப்படியோ தீப்பற்றி விடும் அப்பொழுது விறகு வைத்து எரிக்கிற அடுப்புகள் தான் அதிகம் இருக்கும் அல்லது ஏதோ ஒரு காரணம் கடும் வெப்பமாக கூட இருக்கலாம் . ஆக எங்கு பார்த்தாலும் குடிசைகள் எரிகின்றன எரிகின்றன என்ற செய்திகள் தான் வந்து கொண்டிருக்கும்.

அண்ணா முதல்வரான உடன் செய்த முதல் காரியமே குடிசை வீடுகளையெல்லாம் மாற்றி ஆஸ்பெஸ்டாஸ் வீடுகளாக மாற்றினார். பின்னர் அதை கலைஞர் காலத்திலே அடுக்குமாடி வீடுகளாக மாற்றிய சரித்திரம் அண்ணாவிடம் இருந்து தான் தொடங்குகிறது.

**ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொன்னதைப் போல, அதேபோல அடுத்தவர்களுடைய மனம் அறிந்து செயல்படக் கூடியவர். அறிஞர் அண்ணா நல்லதம்பி படத்திற்கு வசனம் எழுதுகிறார். அதை தயாரிப்பவர் அதிலே நடிப்பவர் கலைவாணர் என். எஸ்.கே . அவர் மிக வசதியாக இருந்த கால கட்டம் அது. அதிலே கலைவாணருக்கு ஒரே ஒரு கதாநாயகி தான். திருமதி பானுமதி அவர்கள் அவருடைய கதாநாயகி. படம் தொடர்பாக அண்ணா அவர்கள் கலைவாணர் அவர்களுடைய இல்லத்திற்கு சென்று இருக்கிற போது, பேசிக் கொண்டிருக்கிற நேரத்தில் ஒன்றை உணர முடிகிறது. கலைவாணருடைய துணைவியார் மதுரம் அவர்களும் ஒரு நடிகை. அவருக்கு மனதிற்குள் ஒரு ஆதங்கம். இவ்வளவு பெரிய படம், அண்ணா வசனம் எழுதுகிற படத்தில் தனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று ஆதங்கத்தை அவர் வெளிப்படுத்தவில்லை. ஆனால் அதிலே புரிந்து கொண்ட அண்ணா வீட்டிற்கு சென்றவுடன் கதையை மாற்றி அமைத்து கலைவாணருக்கு இரண்டு கதாநாயகிகள் என்பதைப் போல உருவாக்கி அதிலே டி எம் மதுரம் அவர்களுக்கும் ஒரு பாத்திரம் கொடுக்கிறார் . ஆக அதில் என்ன புரிகிறது என்று சொன்னால், ஒருவருக்கு என்ன தேவை , என்ன கவலை என்பதை சொல்லி தெரிந்து கொள்கிறவர்கள் உண்டு. சொன்னாலும் புரிந்து கொள்ளாமல் மதிக்காதவர்கள் உண்டு. ஆனால் சொல்லாமலேயே இன்னொருவருடைய மனநிலையை புரிந்து அவர்களுடைய ஏக்கத்தைத் தீர்க்கிற அந்த குணம் தான் அவர் ஆட்சிக்கு வந்த பின் வந்த திட்டங்களை எல்லாம் அப்படி செயல்பட வைத்தது.**

அந்த படத்திலே வசனம் எழுதியதற்காக அது பெரிய வெற்றியை பெற்றதற்காக கலைவாணர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களுக்கு விலை உயர்ந்த காரை பரிசாக அளித்ததோடு மட்டுமல்லாமல், அப்பொழுதெல்லாம் பெட்ரோல் போடுவதற்கு பெரிய அளவு தட்டுப்பாடு இருந்த காரணத்தால் , தொடர்ந்து ஒரு மாத காலத்திற்கு பெட்ரோல் போடுவதற்கான கூப்பன்களையும் கொடுத்து விட்டுப் போனதாக சொல்லுவார்கள்.

தொடர்ச்சி... நாளை